# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:129:2022 நாள்: 30.09.2022

அன்பார்ந்த தோழர்களே,

## செயற்குழுக் கூட்டம்

நமது சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் கடந்த 10-11 தேதிகளில், கோவையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், நமது மண்டல பொதுமேலாளர் திரு.**R.விஸ்வேஸ்வரன்** அவர்களும், திருப்பூர் வட்டார நிர்வாகி திரு.**P.M.செந்தில்குமார்** ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். கூட்டம் துவங்குவதற்கு முன்னதாக நமது சிறப்பு விருந்தினர்களும், தலைவர்களும் ஐந்து மரக்கன்றுகளை வனக்கல்லூரி வளாகத்தில் நட்டனர்.

மண்டல பொதுமேலாளர் திரு.**R.விஸ்வேஸ்வரன்** அவர்கள் சிறப்புரையாற்றினார். தற்சமயம் யூனியன் வங்கியில் பணியாற்றும் பொதுமேலாளர்களில், தமிழகத்தைச் சார்ந்தவர் இவர் ஒருவர் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. அவர் தனது உரையில், வங்கியின் நிலை, வங்கித்துறையும் பொதுத்துறை வங்கிகளும் சந்திக்கும் பிரச்சனைகள், புதிய நிர்வாகத்தின் எதிர்பார்ப்பு குறித்து விரிவாக விளக்கினார். புதிதாக வங்கியில் சேர்ந்துள்ள ஊழியர், அதிகாரிகளின் நிலை குறித்தும், அவர்களுக்கு மூத்த ஊழியர்கள் வழிகாட்டவேண்டியதையும் சுட்டிக்காட்டினார். இன்று அனைத்து வங்கிகளும் ஒரே மாதிரியான வட்டி வழங்கும்போது, வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கான ஒரே வழி நாம் வழங்கும் சேவை மட்டுமே என்பதையும் தெளிவுபடுத்தினார். வாடிக்கையாளர் சேவை வங்கியில் திருப்திகரமாகவுள்ள அதே சூழலில், சேமிப்பு, நடப்பு கணக்குகளில் பிற வங்கிகளுடன் ஒப்பிடுகையில், நாம் ஏன் பின் தங்கியுள்ளோம் என்ற கேள்வியையும் எழுப்பினார்.

திருப்பூர் வட்டார நிர்வாகி திரு.**P.M.செந்தில்குமார்** அவர்கள் தனது உரையில், தொழிற்சங்கங்களின் அவசியம் குறித்தும், வங்கி நிர்வாகமும், தொழிற்சங்கமும் இணைந்து செயல்படவேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவாக பேசினார். சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்ட தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் துணைத் தலைவரும், கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர்.**S.மீனாட்சி சுப்பிரமணியன்,** கோவையின் பெருமை குறித்தும், நமது அமைப்புக்கும் கோவைக்கும் உள்ள தொடர்பு குறித்தும் விவரித்து, வாழ்த்துரை வழங்கினார். மற்றொரு சிறப்பு அழைப்பாளர் தோழர்.K.M.செல்வராஜ், அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் போக்குவரத்து துறை செயலாளர் சிறப்புரையாற்றினார். தற்பொதுள்ள அரசியல், பொருளாதர சூழல், வேலையில்லத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு, சமூக பதற்றம், இந்துத்துவா கொளகையின் காரணமாக தொழிற்துறையிலும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து விவரித்தார்.

சங்கத்தின் துணைப் பொருளாளர் தோழர்.**R.கோபாலகிருஷ்ணன்** அவர்கள் சங்கம் மற்றும் ஊழியர் நலநிதி ஆகியவற்றின் தணிக்கை செய்யப்பட்ட 31.12.2021 வரையிலான கணக்குகளை செயற்குழுவில் சமர்ப்பிக்க, அவை அதை ஒருமனதாக ஏற்றுக்கொண்டது.

கடந்த ஆண்டு மாமல்லபுரத்தில் நடைபெற்ற சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்திற்குப்பின் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும், சங்கத்தின் செயல்பாடுகள் குறித்தும் செயற்குழு விரிவாக விவாதித்தது.

சங்கத்தின் 24வது மாநாட்டை சென்னையில் வரும் நவம்பர் மாதம் 20, 21 தேதிகளில் பொன்விழா மாநாடாக நடத்துவது என்ற சங்க மையக்குழுவின் முடிவிற்கு செயற்குழு ஒருமனதாக தனது ஒப்புதலை தெரிவித்தது. மாநாட்டை சிறப்பாக நடத்துவது குறித்து பல தோழர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி மாநாட்டை வெற்றிபெறச்செய்வது என்று செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் உறுதியேற்றனர்.

மாநாட்டிற்கு தேவையான நிதியாதரத்தை திரட்டிட, சிறப்பு மலர் வெளியிடவும், நன்கொடைகள் பெறவும் எடுக்கப்பட்ட சங்க மையக்குழுவின் முடிவிற்கு செயற்குழு ஒருமனதாக தனது ஒப்புதலை தெரிவித்தது. அனைவரும் முழு முயற்சி மேற்கொண்டு, தேவையான நிதியைத் திரட்டவும் முடிவு செய்யப்பட்டது.

1973ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நமது சங்கத்தின் பொன்விழா நிகழ்வை வரும் 24வது மாநாட்டுடன் இணைத்து கொண்டாடவும், அதன் ஒரு பகுதியாக சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து சிறப்பிக்கவும் முடிவு செய்யப்பட்டது. பொன்விழா தொடர்பாக உறுப்பினர்கள் ஆலோசனைகளை பெறவும் திட்டமிடப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த தற்காலிக ஊழியர்கள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்று மாலை 6 மணியளவில் நடத்தப்பட்டது. அவர்களுடைய பிரச்சனைகளை விவாதித்து, சங்கம் எடுத்துள்ள, எடுக்கவிருக்கிற முயற்சிகள் அவர்களிடம் விரிவாக விளக்கப்பட்டது.

இந்தச் செயற்குழுக் கூட்டத்திற்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்த கோவை பிராந்திய தோழர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தோழமை வாழ்த்துகளுடன்,

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்

24th Biennial Golden Jubilee Conference
20th & 21st November, 2022
Chennai
Let us make it great and memorable